சென்னை துறைமுகத்தினை விரிவுபடுத்தல்

*வினா எண். 654—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை துறைமுகத்தினை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு பற்றி மத்திய அரசு நமது மாநில அரசினரிடம் கலந்து ஆலோசித்ததா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, சென்னைத் துறைமுகத்திற்கு வருகின்ற கப்பல்கள் பழுதடைகின்ற நேரத்திலே அவைகளையெல்லாம் மறுபடியும் ரிப்பேர் செய்வதற்கு வேறு துறைமுகங்களுக்குக் கொண்டு போகவேண்டிய நிலைமை இருக்கிறது. இங்கே பணிமனைகள் இல்லை. எனவே, பணிமனைகள் கட்டுவதற்காக இந்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்து மத்திய அரசை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னைக்கு வருகின்ற, குறிப்பாக, சரக்குக் கப்பல்களைப் பொறுத்த வரைக்கும் பழுது செய்வதற்கு இங்கே வசதி இல்லை என்பது உண்மைதான். மைய அரசோடு மாநில அரசு பல முறை தொடர்பு கொண்டு 180 மீட்டர் ஆழமுள்ள கப்பல் பழுது பார்க்கும் தொழிற்கூடம் அமைக்க மைய அரசு ஒத்துக் கொண்டிருக்கிறது. 220 மீட்டர் ஆழமுள்ள தொழிற்கூடமாக அமைக்கப்படுமானால் அப்பொழுதுதான் பெரிய கப்பல்களை அங்கே பழுதுபார்க்க முடியும். கல்கத்தா, பம்பாய், போன்ற பகுதிகளுக்குச் சென்று அதிகச் செலவிடுவதைத் தடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் மைய அரசின் மாண்புமிகு சந்த் ராம் அவர்களிடம் எடுத்துரைத்தார். அவர்களும் அதைப் பரிசீலித்து உடனே ஆவன செய்வதாக உறுதி அளித்துள்ளார்.